# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/35 - 2022 දෙසැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.15

*2310/35 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1) (அ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

கலேவெல பிரதேச சபை

கலேவெல பிரதேச சபை உறுப்பினரொருவரான திரு. ஹேரத் முதியன்சேலா வெதகெதர ஜயந்த ஹேரத் அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி பிரதேச சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென கலேவெல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான புலஸ்தி பதிரண ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**புலஸ்தி பதிரண**,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கலேவெல பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தளை,
2022, திசெம்பர் 08.

EOG 12 - 0159




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மட்டக்களப்பு மாநகர சபையின் 07 ஆம் இலக்க மாமாங்கம் வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட புஸ்பராஜ் ரூபராஜ் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மட்டக்களப்பு மாநகர சபையின் 07 ஆம் இலக்க மாமாங்கம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆன் யுக்கிறிஸ்டியா வள்த்தசார் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

மட்டக்களப்பு மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான முகைதீன் பாவா முகம்மது சுப்யான் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஆன் யுக்கிறிஸ்டியா வள்த்தசார் என்பவர் மட்டக்களப்பு மாநகர சபையின் 07 ஆம் இலக்க மாமாங்கம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எம். பி. எம். சுப்யான்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மட்டக்களப்பு மாநகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2022, திசெம்பர் 14.

EOG 12 - 0160